பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
*14 .11. 2025* **FRIDAY** *7. 15* **AM**
ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

2. குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் புதுதில்லியில் இன்று இந்திய தொலைத்தொடர்பு சேவை துறையின் வைரவிழா கொண்டாட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

3. வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் 13வது சர்வதேச சுற்றுலா மாநாடு இன்று சிக்கிம் தலைநகர் கேங்டாக்கில் தொடங்குகிறது.

4. இந்தியா – நேபாளம் இடையே ரயில் மற்றும் சாலை இணைப்புகளை மேம்படுத்துவது குறித்து இருநாடுகளின் வர்த்தகத் துறை அமைச்சர்கள் பேச்சு நடத்தினர்.

5. ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

மாநிலத்தின் 38 மாவட்டங்களில் 46 வாக்கு எண்ணும் மையங்களில் காலை எட்டு மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.

243 தொகுதிகளை கொண்ட பீகார் மாநில சட்டப்பேரவைக்கு கடந்த ஆறு மற்றும் 11-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கைக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு வினோத் சிங் குஞ்சியால் தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் புதுதில்லியில் இன்று இந்திய தொலைத்தொடர்பு சேவை துறையின் வைரவிழா கொண்டாட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

நாட்டின் தொலைத்தொடர்பு துறையின் வளர்ச்சிக்கு சேவைப் பிரிவு ஆற்றியுள்ள பங்களிப்புகளை நினைவுகூரும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தில்லியில் நடைபெறும் சர்வதேச ரோட்டரி சங்கத்தின் நிகழ்ச்சியிலும் குடியரசு துணைத்தலைவர் பங்கேற்கிறார்.

அந்த அமைப்பு மேற்கொண்டு வரும் சமூகப் பணிகளை எடுத்துரைக்கும் வகையிலும் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரிவுபடுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வடகிழக்கு மண்டலத்திற்கான 13வது சர்வதேச சுற்றுலா மாநாடு இன்று சிக்கிம் தலைநகர் காங்டாக்கில் தொடங்குகிறது.

மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தொடங்கி வைக்கவுள்ள இந்த மாநாட்டில், சிக்கிம், அருணாச்சலப்பிரதேச முதலமைச்சர்களும், வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா அமைச்சர்களும் பங்கேற்கவுள்ளனர்.

வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் ஸ்பெயின், தாய்லாந்து உள்பட 19 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

>>>>><<<<<

நியூ மங்களூரு துறைமுகம் சர்வதேச அளவிலான கடல்சார் மையமாக மாறியுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

மங்களூருவில் நேற்று நடைபெற்ற நியூ மங்களூரு துறைமுக ஆணையத்தின் பொன்விழா கொண்டாட்டத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், இந்த துறைமுகம், தற்போது ஆண்டுதோறும் 46 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டு வருவதாகவும் வரும் 2047 ஆம் ஆண்டுக்குள் 100 மில்லியன் டன் சரக்குகளைக் கையாள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

*இந்த விழாவின்போது, 16 முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் 113 சமூகப் பொறுப்புத் திட்டங்கள் உட்பட மொத்தம் ரூ.1,500 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டங்களை அமைச்சர் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.*

*>>>>><<<<<*

*மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நேற்று புதுதில்லியில் நேபாள வர்த்தகத்துறை அமைச்சர் அனில் குமார் சின்ஹாவுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.*

*இரு நாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்து நெறிமுறையை திருத்தும் ஒப்பந்தத்தை இரு நாடுகளும் இந்தச் சந்திப்பின்போது பரிமாறிக் கொண்டன.*

*Jogbani-Biratnagar ரயில் இணைப்பு வழியில், சரக்கு பெட்டகம் மற்றும் மொத்தமாக சரக்குகளை கொண்டு செல்ல இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.*

*இதன்மூலம், கொல்கத்தா மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களில் இருந்து நேபாளத்திற்கு சரக்குகளை எடுத்துச் செல்வது எளிதாகும் என்றும் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*இந்தியா – மாலத்தீவு இடையே இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் நேற்று மாலத்தீவின் சகா அஹமது சலீம் தலைமையிலான 30 பேர் கொண்ட குழுவினருடன் அமைச்சர் கலந்துரையாடினார்.*

*நிர்வாகம், புத்தொழில் கொள்கைகள், உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற பல்வேறு துறைகளில் மாலத்தீவு அதிகாரிகளின் திறன் மேம்பாட்டிற்கு இந்தியா உதவும் என்று அமைச்சர் கூறினார்.*

*மாலத்தீவு அதிகாரிகளின் தேவைக்கேற்ப, முக்கியத் துறைகளில் அவர்களுக்குத் தேவையான சிறப்புத் திட்டங்களை வகுக்க இந்தியா விரும்புவதாகவும் அமைச்சர் கூறினார்.*

*>>>>><<<<<*

*புனே- பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் நேற்று நிகழ்ந்த சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.*

சாலையில் சென்று கொண்டிருந்த சரக்கு வாகனம் ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து, பல்வேறு வாகனங்கள் மீது மோதியதால் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள், அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாக புனே நகர காவல்துறை ஆணையர் திரு. அமிதேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இந்தியா சர்வதேச வர்த்தக கண்காட்சி இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த 14 நாள் கண்காட்சியில் சீனா, தென்கொரியா. எகிப்து, ஈரான், ஐக்கிய அரபு எமிரேட் உள்ளிட்ட 12 நாடுகள் பங்கேற்கின்றன.

இந்த கண்காட்சியில், பாதுகாப்பு உற்பத்தித் துறை, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு தளவாடங்களை காட்சிப்படுத்தவுள்ளது.

சுயசார்பு இந்தியா என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் பாதுகாப்பு உற்பத்தித் துறையில் இந்தியா அடைந்து வரும் தன்னிறைவை விளக்கும் வகையில் நவீன தளவாடங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களில் போதை பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவது குறித்த இரண்டு நாள் மாநாடு நேற்று நாகாலாந்தில் தொடங்கியது.

போதைப்பொருள் தடுப்பு சட்டத்தை மேலும் தீவிரமாக செயல்படுத்துவது மற்றும் போதைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் போன்ற அம்சங்கள் தொடர்பாக இதில் விவாதிக்கப்படவுள்ளதாக நாகாலாந்து காவல்துறை தலைமை இயக்குநர் ரூபின் சர்மா கூறினார்.

இந்த மாநாட்டில் தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பின் அதிகாரிகள், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம், மற்றும் எட்டு வடகிழக்கு மாநிலங்கள், மேற்கு வங்க காவல்துறை அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் நேற்று மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

சோப்பூரில் நேற்று, மாநில காவல்துறை மற்றும் மத்திய பாதுகாப்புப் படையினர் கூட்டாக நடத்திய சோதனையின் போது, இவர்கள் கைது செய்யப்பட்டதாக காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த இரண்டு தீவிரவாதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, புல்வாமா பகுதியில் காவல்துறையினர் பல்வேறு இடங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரிலிருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகளை கண்டறியும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

>>>>><<<<<

இந்தியா - பங்களாதேஷ் எல்லையில் வேலி அமைப்பது தொடர்பாக, மேற்கு வங்க அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்று கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கை விசாரித்த நீதிமன்றம், மாநில அரசு 15 நாட்களுக்குள் இதுகுறித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது

மேற்குவங்கம், பங்களாதேஷ் எல்லையில் பல இடங்களில் வேலி இல்லாததால், ஊடுருவல் மற்றும் கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு. அசோக் சக்கரவர்த்தி, வேலி அமைப்பதற்கான நிலங்களைக் கையகப்படுத்துவதில் மேற்கு வங்க அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று விசாரணையின் போது நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

>>>>><<<<<

வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான பயணத்தை எளிதாக்கும் வகையிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

கவுன்சிலின் பொதுச் செயலாளர் திரு. Jasem Mohamed Albudaiwi, குவைத் நகரில் நடந்த இந்நாடுகளின் அமைச்சர்களின் கூட்டத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதன்மூலம் ஒரே இடத்தில் அனைத்துப் பயண நடைமுறைகளையும் மேற்கொள்ள முடியும்.

இந்தத் திட்டமானது, முதற்கட்டமாக, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகளுக்கு இடையே விமானப் பயணங்களுக்காக, அடுத்த மாதம் முதல் சோதனை அடிப்படையில் அமல்படுத்தப்படும்.

>>>>><<<<<

ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-11 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரில் Jia Heng Jason The-ஐ வென்றார்.

>>>>><<<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது

கொல்கத்தா ஈடன் கார்டனில் இப்போட்டி காலை மணி 9.30-க்கு நடைபெறுகிறது.

**>>>>>END<<<<<**